TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040893

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 2 Date: நாள் 04.04.2024

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act. Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.04.2024 Date to : நாள் வரை 04.04.2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 hrs Time to : நேரம் வரை 13.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.04.2024 Time : நேரம் 14.15 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 2 km West Udhagamandalam Taluk Office.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Jayaganesh. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Madiyan.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2024 (d) Nationality : நாட்டினம் Hindu (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி D.No. 4/343, Kambatty Village, 7. Manihatty (PO) Thummanatty Panchayat, Udhagamandalam

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Karpagam, Village Administrative Officer. Thummanatty-II Village Udhagamandalam Taluk, The Nilgiris.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

4/4/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B. GEETHALAKSHMI.
Rank: நிலை ......................No. எண் ..........
Insp, VAC, The Nilgiris.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**<u>நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2024/AC/NI u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்;-</u>**

**<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>**

04.04.2024-ம் தேதி வியாழன்கிழமை மதியம் 14.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலக அலுவலில் இருந்த போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்கா, தும்மனட்டி ஊராட்சி, T.மணியட்டி அஞ்சல், கம்பட்டி கிராமம், கதவு எண்.4/343 என்ற முகவரியில் வசிக்கும் மடியன் என்பவரின் மகன் திரு.M.ஜெயகணேஷ் என்பவர் அலுவலகம் வந்தார். அவரிடம் விசாரிக்க புகார் மனு கொடுக்க வந்திருப்பதாக கூறினார். அவரை அலுவலகத்திற்குள் அழைத்து அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகார் மனுவை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியானவர் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர் என்றும், தும்மனட்டி-II கிராம நிர்வாக அலுவலகத்தில் வருவாய் துறை சம்மந்தமான பணிகளுக்கு பொதுமக்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக தெரியவருகிறது. மேலும் புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையயும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 04.04.2024-ம் தேதி மதியம் 14.45 மணிக்கு நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2024/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் படி, மேற்படி எதிரி திருமதி.கற்பகம், கிராம நிர்வாக அலுவலர், தும்மனட்டி-II

(signature) 4/4/24

கிராமம், உதகமண்டலம் தாலுக்கா, நீலகிரி மாவட்டம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் M.ஜெயகணேஷ், த/பெ மடியன், கதவு எண்.4/343. கம்பட்டி கிராமம், T.மணியட்டி அஞ்சல், தும்மனட்டி ஊராட்சி, உதகமண்டலம் தாலுக்கா, நீலகிரி மாவட்டம் - 643 214. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். ஐயா, நான் உதகமண்டலம் தாலுக்கா, கம்பட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். உதகமண்டலம் தாலுக்கா, தும்மனட்டி-II கிராமத்திற்கு உட்பட்ட சர்வே எண்.824/1A-ல் எங்களுக்கு பூர்வீகமாக 6 ½ சென்ட் விவசாய நிலம் உள்ளது. அந்த இடத்திற்கான சிட்டாவில் எனது பெயரை சேர்க்க ஆதார்கார்டு, வரைபடம், நில அளவையரின் அறிக்கை மற்றும் பழைய சிட்டா ஆகியவற்றை இணைத்து ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகைக்கு முன்பாக ஊட்டி தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் ஸ்கேன் செய்து விண்ணப்பித்து அதற்கான ஒப்பளிப்பையும் பெற்றுக்கொண்டேன். ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகைக்கு பிறகு முதல் வெள்ளிக்கிழமை எனது விண்ணப்பம் தொடர்பாக திருமதி.கற்பகம், கிராம நிர்வாக அலுவலர், தும்மனட்டி-II அவர்களை தும்மனட்டி-II கிராம நிர்வாக அலுவலகத்தில் வைத்து கேட்டேன். அவர் சிட்டாவில் பெயர் சேர்க்க வேண்டுமானால் தனியாக ரூ.3,000/- கொடுத்தால்தான் சிட்டாவில் பெயர் சேர்க்க முடியும் என்று சொன்னார். அதன்பின்னர் நான் லஞ்சமாக பணம் கொடுக்காததால், எனது விண்ணப்பம் நிராகரிப்பட்டது. அதன்பிறகு 09.02.2024-ம் தேதி ஊட்டி கலெக்டர் ஆபிஸில் உள்ள இ-சேவை மையத்தில் மீண்டும் ஆதார்கார்டு, வரைபடம், நில அளவையரின் அறிக்கை மற்றும் பழைய சிட்டா ஆகியவற்றை இணைத்து ஸ்கேன் செய்து ஒப்பளிப்பை மனு எண்.2024/0103/11/684033-ஐ பெற்றுக்கொண்டேன். அந்த விண்ணப்பத்தில் எனது அப்பாவின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்று காரணம் குறிப்பிட்டு மீண்டும் நிராகரிக்கப்பட்டது. அதன்பிறகு சொந்த வேலையின் காரணமாகவும், நான் அயோத்திக்கு சென்று வந்ததாலும் என்னால் VAO திருமதி.கற்பகம் அவர்களை பார்க்கமுடியவில்லை. பின்னர்

4/4/24

03.04.2024-ம் தேதி மதியானம் எனது செல்போன் எண்.9952357407-லிருந்து VAO திருமதி.கற்பகம் அவர்களுக்கு போன் செய்தேன். அவர் என்னுடைய போனை எடுக்காததால் எனது நண்பர் திரு.ராஜபெட்டன் என்பவரின் செல்போன் எண்.9843623732-லிருந்து VAO அவர்களுடைய செல்போன் எண்.9500261851-க்கு தொடர்பு கொண்டு சிட்டாவில் பெயர் சேர்ப்பது சம்மந்தமாக பேசினேன். அப்போது அவர் ஊட்டி ஆர்ட்ஸ் காலேஜ் ஜங்ஷனுக்கு வரச்சொன்னார். நானும் மதியானம் சுமார் 03.30 மணிக்கு ஊட்டி ஆர்ட்ஸ் காலேஜ் ஜங்ஷனுக்கு சென்று VAO-வை பார்த்து சிட்டாவில் பெயர் சேர்ப்பது சம்மந்தமாக கேட்டேன். ஏற்கனவே பணம் கொடுக்காததால்தான் விண்ணப்பத்தை ரிஜெக்ட் செய்தேன். இன்றே விண்ணப்பித்தால் நான் ரெடி செய்து கொடுக்கிறேன் என்று VAO கூறினார். நான் எனது உறவினர் திரு.குமார் என்பவரின் விண்ணப்பமும் உள்ளது என்று தெரிவித்தேன். இ-சேவை மையத்தில் சிட்டாவில் பெயர் சேர்ப்பதற்கான இருவரின் இணைப்புகளையும் கொடுத்து விண்ணப்பிக்க சொன்னார். உங்க விண்ணப்பத்திற்கும், குமாரின் விண்ணப்பத்திற்கும் சேர்த்து எனக்கு தனியாக ரூ.8,000/- கொடுத்துட்டு போங்க என்று சொன்னார். நான் பணம் எதுவும் எடுத்து வரவில்லை என்று சொன்னேன். அவர் இ-சேவை மையத்திற்கு சென்றுவிட்டு பிறகு கூப்பிடுங்கள் என்று சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டார். நானும் ஊட்டி தாலுக்கா ஆபிஸில் உள்ள இ-சேவை மையத்திற்கு மாலை சுமார் 04.30 மணிக்கு சென்று அங்கு அலுவலில் இருந்த நபரை பார்த்து சிட்டாவில் பெயர் சேர்ப்பதற்கான என்னுடைய ஆவணங்களையும் திரு.குமாரின் ஆவணங்களையும் கொடுத்தேன். VAO திருமதி.கற்பகம் அவர்கள் எங்களுடைய விண்ணப்பத்தை ஸ்கேன் செய்ய வேண்டாம் என்று ஏற்கனவே கூறியிருப்பதாக தெரிவித்தார். அப்போது நான் VAO திருமதி.கற்பகம் அவர்களுக்கு எனது செல்போன் எண்.9952357407-லிருந்து VAO அவர்களுடைய செல்போன் ஏண்.9500261851-க்கு தொடர்பு கொண்டு விவரத்தை சொன்னேன். அதற்கு VAO, இ-சேவை மைய அலுவலரிடம் போனை கொடுக்கச் சொல்லி ஜெய்கணேஷ் கொண்டுவந்துள்ள ஆவணங்களை வாங்கி ஸ்கேன் செய்யச் சொன்னார். இ-சேவை மைய அலுவலர் எங்கள் இருவரின் ஆவணங்களையும் பெற்றுக்கொண்டு இன்று

4/4/24

மின்சாரம் தடைபட்டிருந்ததால், ஏற்கனவே 10-க்கு மேல் விண்ணப்பங்கள் ஸ்கேன் இருப்பதால், அதனை முடித்துவிட்டு இருவருடைய இணைப்புகளையும் ஸ்கேன் செய்வதாக கூறினார். அதன்பிறகு VAO திருமதி.கற்பகம் அவர்கள் என்னை மாலை சுமார் 05.00 மணிக்கு எனது செல்போனில் கூப்பிட்டு ஊட்டி தாலுக்கா ஆபிஸ் உள்ள RI ஆபிஸிற்கு பக்கத்தில் வரச்சொன்னார். நானும் அங்கு சென்று அவரை பார்த்தேன். அவர் அப்ளே செய்து விட்டீர்களா என்று கேட்டார். நான் இ-சேவை அலுவலரிடம் இருவருடைய ஆவணங்களையும் கொடுத்ததற்கு, அவர் நாளை 04.04.2024 காலை 10.00 மணிக்கு இ-சேவை மையத்திற்கு வந்தால் ஸ்கேன் செய்து விண்ணப்பங்களை அனுப்பிவிடலாம் என்று கூறியதாக தெரிவித்தேன். அதற்கு VAO சிட்டாவில் பெயர் சேர்ப்பதற்கான இரண்டு விண்ணப்பங்களுக்கும் சேர்த்து பணம் ரூ.8,000/-த்தை தனக்கு தனியாக கொடுக்கச்சொன்னார். என்னால் அவ்வளவு பணம் ஏற்பாடு செய்யமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.2,000/- குறைத்துக்கொண்டு ரூ.6,000/- கொடுங்கள் என்று சொன்னார். சிட்டாவில் பெயர் சேர்க்க எனக்கு பணம் கொடுத்தால் மட்டுமே உங்களது விண்ணப்பத்தை பார்வேடு செய்து DT-க்கு அனுப்புவேன். இல்லையென்றால் விண்ணப்பங்களை எதாவது காரணம் சொல்லி மீண்டும் ரிஜெக்ட் செய்துவிடுவேன் என்று கண்டிப்புடன் கூறினார். மேலும் நாளை 04.04.2024-ம் தேதி விண்ணப்பத்தை அப்லோடு செய்தபிறகு என்னை செல்போனில் தொடர்புகொள்ளுமாறு கூறினார். அதன்படி நான் இன்று 04.04.2024 காலை ஊட்டி தாலுக்கா ஆபிஸில் உள்ள இ-சேவை மையத்திற்கு சென்றபோது அங்கு மின்சாரம் இல்லாததால், சிறிது நேரம் அங்கேயே காத்திருந்தேன். அதன்பிறகு மதியம் சுமார் 12.00 மணிக்கு மின்சாரம் வந்தவுடன் இ-சேவை மைய அலுவலர் என்னை அழைத்து இருவருடைய ஆவணங்களையும் ஸ்கேன் செய்து அக்னாலெஜ்மெண்ட் எண்.2024/0103/11/085688 கொடுத்தார். பின்னர் VAO திருமதி.கற்பகம் அவர்களை மதியம் சுமார் 01.00 மணிக்கு அவருடைய செல்போன் எண்.9500261851-க்கு என்னுடைய செல்போன் எண்.9952357407-ல் தொடர்பு கொண்டு எங்கள் இருவருடைய ஆவணங்களும் ஸ்கேன் செய்துவிட்டதாக கூறினேன். அதற்கு அவர் நான்

Mageethalakshmi
4/4/24

கேட்ட பணம் ரூ.6,000/- எடுத்து வந்தீர்களா என்று கேட்டார். நான் எடுத்து வந்திருப்பதாக சொன்னேன். பின்னர் அவர் வெளியில் இருப்பதால் ஊட்டிக்கு வந்தவுடன் கூப்பிடுவதாக சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் தும்மனட்டி-II கிராம VAO திருமதி.கற்பகம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.6,000/-ஐ எடுத்துக்கொண்டு இன்று 04.04.2024 மதியானம் லஞ்ச ஒழிப்புத்துறையில் சட்டப்படி நடவடிக்க எடுக்க தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். இப்படிக்கு ஒப்பம் (XXXX) 04.04.2024 (M.ஜெயகணேஷ்). Submitted: Received the above complaint on 04.04.2024 at 14.15 hrs and after conducting a preliminary enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.2/2023 u/s 7 of PC Act 1988 as amended in PC (Amendment) Act 2018 on 04.04.2024 at 14.45 hrs. Sd (XXXX) 04.04.2024 Inspr, VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் அமர்வு நீதிபதி, முதன்மை அமர்வு நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

4/4/24